DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.186/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | அசோக்பாபு (சார்பு ஆய்வாளர்) (Pw.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day August of 2023

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது சென்னை லஞ்ச ஒழிப்பு துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.01.2018ம் தேதி நான் திருச்சுழி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா ஆத்திபட்டியைசேர்ந்த பழனியாண்டி மகன் நாகராஜன் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 21/18 இதச பிரிவுகள் 279, 337, 338ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் முதல் தகவல் அறிக்கையையும் புகார் மனுவையும் இணைத்து நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், மேல்அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கினை எனது

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.01.2018ம் தேதி 19.00மணியளவில் சம்பவ இடமான திருச்சுழி – அருப்புக்கோட்டை மெயின்ரோடு கோணப்பனநேந்தல் விலக்கு பஸ்டாப் சென்று சம்பவ இடத்தை சம்பவ சாட்சிகள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.(**அந்த பார்வை மகஜர் அதசாஆ 4, மாதிரி வரைபடம அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றேன். வழக்கின் நேரில் கண்டசாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் காயம்பட்ட அழகர்சாமி என்பவரை விசாரிக்க மதுரை ராஜாஜி மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்ததால் அவரை விசாரிக்காமல் வழக்கின் வாதி மற்றும் அவருடன் இருந்த சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் வழக்கின் வாதி மேலகண்டமங்கலம் ஜெயவிலாஸ் மில்லில் செக்யூரிட்டியாகவும் வழக்கின் காயம் பட்ட வாதியின் அண்ணன் அழகர்சாமி பன்னிகுண்டு ஜெயகிருஷ்ணா மில்லில் செக்யூரிட்டியாகவும் வேலை பார்த்தும் ஆத்திபட்டியில் குடும்பத்துடன் அருகருகே வசித்து வந்துள்ளனர். கடந்த 15.01.2018ம் தேதியன்று வாதி நாகராஜன் ஆப் நைட் பணியை முடித்துவிட்டு 16.01.2018ம் தேதி அதிகாலை சுமார் 5.15மணியளவில் பணிக்குண்டு ஜெயகிருஷ்ணா மில்லுக்கு சென்று அங்கு ஆப் நைட் பணி முடித்து காத்திருந்த தனது அண்ணன் அழகர்சாமியை அழைத்து வந்து கோணப்பனநேந்தல் பஸ்டாப் விலக்கு அருகே நடந்து வந்ததும் சுமார் 5.45மணியளவில் வாதி நாகராஜ் திருச்சுழி– அருப்புக்கோட்டை மெயின்ரோட்டை வடக்கில் இருந்து தெற்காக முதலில் கடந்து சென்றதாகவும் பின்னர் வாதி நாகராஜன் அவரை தொடர்ந்து சென்றபோது திருச்சுழி – அருப்புக்கோட்டை வழியாக எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் டிஎண். 67AH 6467 என்ற டிவிஎஸ் ஸ்டார் சிட்டி இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்து ரோட்டை கடக்க வந்த அழகர்சாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது எனது விசாரணையில் தெரிய வந்தது. வழக்கின் காயம்

பட்ட அழகர்சாமி 29.01.2019 ம் தேதி இறந்துவிட்டபடியால் வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி–

2. புகாரானது 5 1/2 காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் கூறியுள்ளேன். முதல் தகவல் அறிக்கை காலம் 8 ல் வாதியால் காலதாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் மனுவில் ரோட்டை கடக்கும்போது விபத்து ஏற்பட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் கவனக்குறைவினால் புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் கைது செய்யவில்லை சாட்சிகளை நான் முறையாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் நான் வழக்கு கோப்பை 25 ம் தேதி ஒப்படைத்தேன்.

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருச்சுழி.